**<u>முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>**

<u>O.S. No. 249/2014 c/w 304/2014, 341/2015</u>

**<u>Witness DW 1</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தம்பிதுரை | தொழில் | |
| த/பெ | அங்கப்பன் | வயது | |
| ஊர் | | தேதி | 26.06.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (26.06.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது தாத்தாவின் பெயர் முத்துசாமி . அவருக்குஅங்கப்பன், நாராயணன், தனபால் ஆகியோர் மகன்கள் என்றால் சரி . முத்துசாமி மற்றும் அவரது மகன்கள் கூட்டுகுடும்பமாக இருந்தனர் என்றால் சரி . பணங்குப்பம் கிராமத்தில் 1 ஏக்கர் 66 செண்ட்நிலமும், தொடர்ந்தனுாரில் 35 செண்ட் நிலமும் கூட்டு குடும்ப சொத்தாக இருந்தது என்றால் சரி . கோலியனுார் கிராமத்தில் ஒரு மெத்தை வீடு உள்ளதா என்றால் இல்லை ஓட்டு வீடு தான் உள்ளது. முத்துசாமி என்பவர் இறந்தபிறகு அங்கப்பன் என்பவர் தான் கூட்டு குடும்ப தலைவராக இருந்து வந்தார் என்றால் சரி . பணங்குப்பம் கிராமத்தில் இருந்த சொத்தினை குப்புசாமி என்பவரிடம் அங்கப்பன் , நாராயணன், தனபால் ஆகியோர் அடமானம் வைத்து இந்த வழக்கில் 8 வது இன சொத்தினை கிரையம் பெற்றார் என்றால் சரி . அங்கப்பன், நாராயணன், தனபால் ஆகியோர் வழக்கு சொத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தின் மூலமும் அவர்கள் உழைத்த பணத்தி்ன் மூலமும் வழக்கின்

சொல்லப்பட்டுள்ள சொத்தினை கிரையம் வாங்கினர் என்றால் சரி . அவ்வாறு கிரையம் வாங்கும்போது அங்கப்பன் என்பவர் குடும்பத்தின் மூத்தநபர் என்பதால் அவரது பெயரில் கிரையம் பெற்றது என்றால் சரி .பணங்குப்பத்தில் கிராமத்தில் இருந்த 1 ஏக்கர் 64 செண்ட் மற்றும் தொடர்ந்தனூரிலிருந்த 35 செண்ட் நிலத்தினை பரிவர்த்தனை செய்து அங்கப்பன்பெயரில் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி . அங்கப்பன் என்பவர் 1991 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரி . அவருக்கு பிறகு நாராயணன் என்பவர் தான் குடுமபத்தை கவனித்து வந்தார் என்றால் சரி . எனது அப்பா உயிருடன் இருந்த சமயத்தில் நான் சம்பாதித்த எனது பெயரில் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரி . ராதாகிருஷ்ணன் என்பவரும் அரசாங்க உத்தியோகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற பணத்தின் வாயிலாக அவர் பெயரில் அ வரது மகன் பெயரில் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரி. நான் தனிப்பட்ட முறையில் சொத்துக்களை வாங்கியுள்ளது போல் தனபால் மற்றும் நாராயணன் ஆகியோரும் அவரது தனிப்பட்ட வருமானத்தை வைத்து சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரி . அதனால் நாராயணன் தனபால் மற்றும் எனது பெயர் மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோர் பெயரில் உள்ள சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கப்படவில் லை என்றால் சரி . எனது அப்பா உயிருடன் இருந்த காலத்தில் நாராயணன் தனபால் அங்கப்பன் ஆகியோருக்கிடையயே வாய்மொழியாக பாக பிரிவினை நடைப்பெற்றதாக ராதாகிருஷ்ணன் என்பவர் சொல்லியுள்ள விவரம் சரியானதா என்றால் இல்லை . எனது அப்பா இறந்த பிறகு எனக்கும் ராதாகிருஷ்ணனுக்குகம் இடையே எனது அப்பா சொத்திற்காக பாக பிரிவினை நடைப்பெற்றா என்றால் இல்லை. எங்களது கூட்டு குடும்ப சொத்துக்களை பொறுத்து இதுநாள் வரையில் எந்த பாகபிரிவினையாவது நடைப்பெற்றுள்ளதா என்றால் இல்லை .

கூட்டு குடும்ப சொத்தினை பொறுத்து ராதாகிருஷ்ணன் என்பவர் அவரது மகனான ரகுராம் என்பவருக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரி . நாராயணன் என்பவர் உயிருடன் இருந்த காலத்தில் ஏதாவது உயில் எழுதியுள்ளார் என்றால் எழுதியுள்ளார் . அந்த உயிலில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் . என்னிடம் காட்டப்படும் பதிவு செய்யப்பட்ட உயில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது அந்த கையொப்பம் **வா.சா.ஆ 54** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த உயில் வாயிலாக கூட்டக்குடும்பத்தில் பாகம் பிரியாத அவருக்குரிய 3 ல் 1 பாகத்தை அவரது மகளான தனலட்சுமி என்பவருக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரி . தனபால் என்பவரும அவரதுமகன் தயாளன் என்பவருக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரி.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)

I Additional Subordinate Judge,
Villupuram